# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www. tneo.gov.in


**முன்னிலை : திரு.ஆ. தர்மராஜ் – மின்குறை தீர்ப்பாளர்**

<u>மேல்முறையீட்டு மனு எண். 6 / 2012</u>

திரு. எம். இராமசாமி,
த/பெ முத்தையா,
20/114, முத்து ராஜாத்தெரு,
தென்கரை, பெரியகுளம். ––– மேல்முறையீட்டாளர்
(திருவாளர்கள் பழனியப்பன் மற்றும் மகேஸ்வரன்)

மேற்பார்வை பொறியாளர் ,
தேனி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
தேனி – 625 531 ––– எதிர்மனுதாரர்
(திரு. ஆர்.சுகுமார்/செயற் பொறியாளர்/பகிர்மானம்/ பெரியகுளம்)

**<u>கேட்புரை நாள் : 22–5–2012</u>**
**<u>ஆணை நாள் : 19–7–2012</u>**

## <u>ஆணை</u>

மேற்கூறிய மனுதாரரின் 11–1–2012 நாளிட்ட கடிதமானது மேல் முறையீட்டு மனு எண்.6/2012 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கூறிய மேல் முறையீட்டு மனுவின் மீது மின்குறைத் தீர்ப்பாளரின் கேட்புரை, (hearing) 22–5–2012 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனு, எதிர்மனுதாரரின் பதிலுரை, பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் இருதரப்பின் கேட்புரை நாட்களில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் வேண்டுகோள் :**

மேல்முறையீட்டாளர், தனக்கு சொந்தமான உப்புகாட்டு புல எண்.2524/1 தென்கரை கிராமத்திலுள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு ரூ.25,000/– திருத்திய சுயநிதி திட்டத்தின் கீழ் மின்இணைப்பு பெறுவதற்காக பதிவு கட்டணமாக ரூ.500/– ஆன வங்கி வரைவோலை (Demand Draft) மூலமாக மேற்பார்வை பொறியாளர் தேனி மின்பகிர்மான வட்டத்திற்கு அளித்த நாளான 26.5.2008ஐ விவசாய மின்இணைப்பிற்கான முன்னுரிமைக்கு (Priority) எடுத்துக் கொள்ளாமல் பிரிவு அலுவலகத்தில் ரசீது போட்ட தேதியான 29.5.2008ஐ எடுத்து கொள்வதால் தன்னுடைய முன்னுரிமை பின்னால் தள்ளப்பட்டுள்ளதாகவும் மேலும் திருமதி ஆண்டாள் ராணி அவர்களுடைய கிணறும், தன்னுடைய ஆழ்துளை கிணறும், ஒரே மின்னூட்டியில் வருவதால் இருவருடைய மின்இணைப்பிற்கும் சேர்த்து மதிப்பீடு செய்திருக்க வேண்டும். ஆனால் தனித்தனி மதிப்பீட்டாக செய்ததால் தனக்கு 56,000/– ரூபாய் இழப்பு என்றும் தெரிவித்து நீதி வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டுள்ளார்.

2. **வழக்கின் சுருக்கம்** : மேல்முறையீட்டாளர் திரு. எம். ராமசாமி அவர்கள் தனக்கு சொந்தமான தென்கரை கிராமம் புல எண்.2524/1இல் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார். அவருக்கு ரூ.25,000/–க்கான திருத்திய சுயநிதி திட்டத்தின் கீழ் மின்இணைப்பு வழங்க 25.4.2008இல் அன்று அறிவிப்புக் கடிதம் வழங்கப்பட்டது. அதற்கான பதிவு தொகையான ரூ.500/–ஐ பிரிவு அலுவலகத்தில் செலுத்துவதற்காக 26.5.2008 அன்று சென்றபொழுது பணம் வாங்காமல் 29.5.2008 வரை அவகாசம் உள்ளது என்று தெவிக்கப்பட்டதால் மேல்முறையீட்டாளர் ரூ.500/–க்கான வங்கி வரைவோலை (Demand Draft) மேற்பார்வை பொறியாளருக்கு 26.5.2008 அன்று

அனுப்பியதாகவும் ஆனால் அந்தப்பணம் 29.5.2008 அன்றுதான் பிரிவு அலுவலகத்தில் ரசீது போடப்பட்டு அந்த நாள்தான் மதிப்பீடு செய்வதற்கு வரிசையாக எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் கூறியுள்ளார் . ஆனால் தான் 26.5.2008இல் மேற்பார்வை பொறியாளரின் அலுவலகத்திற்கு பதிவு பணத்தை செலுத்தி விட்டதால் அந்த நாள் தான் தன்னுடைய விவசாய இணைப்பிற்கான திருத்திய சுயநிதி திட்டத்தின் ரூ.25,000/– பிரிவுக்கான பதிவு செய்ய பணத்தை செலுத்திய நாளாக கணக்கிட வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் அந்த நாள்தான் தன்னுடைய மின்இணைப்பிற்கான மதிப்பீட்டிற்கான முன்னுரிமையாக கருதப்படவேண்டும் என்றும் அப்படி எடுத்துக் கொள்ளாமல் 29.5.2008 என்று எடுத்து மதிப்பீடு செய்தமையால் தன்னுடைய விவசாய மின் இணைப்பிற்கான மனுவையும் திருமதி. ஆண்டாள் ராணி அவர்களின் விவசாய இணைப்பிற்கான மனுவையும் இணைத்து கூட்டு மதிப்பீடு செய்யப்படும் வாய்ப்பு மறுக்கப்பட்டதாகவும் புகார் எழுப்பியுள்ளார். மின்குறைதீர்க்கும் மன்றம் தேனி மின்பகிர்மான வட்டம் அவரின் கோரிக்கைகளை நிராகரித்து விட்டதால், மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

3. **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u> :** மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) தனக்கு சொந்தமான உப்புக்காட்டு புல எண்.2524/1 தென்கரை கிராமம் பெரியகுளத்தின் ஆழ்குழாய் கிணறு மின்இணைப்பிற்காக பெரியகுளம் மின்வாரிய செயற்பொறியாளர் அவர்களால் மும்முனை மின்இணைப்பிற்கான அறிவிப்பு கடிதம் 25.4.2008 அன்று பெறப்பட்டது. அதன் அடிப்படையில் அதற்கு தேவையான வருவாய் ஆவணங்கள் 12.5.2008 அன்று கிராம நிர்வாக அலுவலகரிடமிருந்து பெறப்பட்டு அன்றே கீழ்வடகரை பிரிவு அலவலக மின்வாரிய இளநிலைப்பொறியாளர் திரு. சுப்பிரமணியன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

(ii) 19.5.2008 அன்று அவரது ஆழ்குழாய் கிணற்றின் ஸ்தல ஆய்வு முடிக்கப்பட்டது. அதன் பின் மதிப்பீடு தயாரிக்க பதிவு தொகையான ரூ.500/– வசூலிப்பதில் மீண்டும் இழுத்தடிக்கும் போக்கினை கடைப்பிடித்தார். இறுதியாக 26.5.2008 அன்று நானும் தினசரி வந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் பதிவு தொகையை வாங்க மறுக்கிறீர்கள் என்று கூறிய போது இளநிலைப்பொறியாளர் அவர்கள் உங்களுக்கு பதிவு தொகை செலுத்துவதற்கான இறுதிநாள் 29.5.2008 வரை உள்ளது அன்று கட்டினால் போதும் என பதிவு தொகையினை வாங்கிட மறுத்துவிட்டார்.

(iii) 26.5.2008 அன்று மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு வங்கி வரைவோலையை செலுத்தியுள்ளார். அதன் அடிப்படையில் 28.5.2008 அன்று திரு. சுப்பிரமணியம் அவர்கள் அவரின் கீழ் பணிபுரியும் திரு. ஜெயக்குமார் மூலம் இளநிலைப்பொறியாளரை சந்திக்கும்படி கூறியதன் அடிப்படையில் தனது மகன் மகேஸ்வரனை அனுப்பிவைத்தார். அவரிடம் திரு. சுப்பிரமணியன் அவர்கள், நீங்கள் அனுப்பித்த வங்கி வரைவோலையின்படி தங்களுக்கு மதிப்பீடு தயார் செய்யப்படுமென்றும், நீங்கள் யாருடைய ஆலோசனைபடியும் செயல்படவேண்டாமெனவும் அறிவுரை கூறியுள்ளார். மேலும் ஒப்புதல் கடிதத்தில் தந்தையிடம் கையொப்பம் பெற்று வரும்படியும் அத்துடன் தங்கள் நிலத்திற்கு அருகிலுள்ளவர்களிடம் தடையில்லா சான்று பெற்று வரும்படியும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் ஒப்புதல் கடிதம் மற்றும் தடையில்லாச்சான்றினையும் இளநிலைப்பொறியாளரிடம் வழங்கப்பட்டது.

(iv) 26.5.2008 அன்று பணம் செலுத்தியுள்ள திருவாளர்கள் மணிகண்டன், அஜ்மல்கான், மோகன்தாஸ், வையாபுரி அவர்களுக்கும் சேர்த்து கூட்டாக மதிப்பீடு தயார் செய்தார்கள். இதில் மேல்முறையீட்டாளர் 26.5.2008 அன்று செலுத்திய அவரது மதிப்பீட்டினை மட்டும் தயார் செய்வதினை தவிர்த்துவிட்டு திரு. வையாபுரி 28.5.2008 அன்று பணம் செலுத்திய

அவருக்கும் சேர்த்து நால்வருக்குமாக கூட்டு மதிப்பீடு தயாரித்துள்ளார். இதில் இவர்கள் நால்வருக்கும் கூட்டு மதிப்பீடு தயார் செய்திடத்தான் அவர்கள் மூவருக்கும் **26.5.2008** அன்றும் வையாபுரியிடம் **28.5.2008** அன்றும் பதிவு தொகையை வசூலித்துள்ளார்கள்.

(v) மேலே சொன்ன நால்வருக்கும் ஒரே மின்மாற்றியிலும், ஒரே தாழ்வழுத்த மின்னூட்டியிலும் அமைத்துள்ளதால் கூட்டு மதிப்பீடு தயார் செய்தது போல் மேல்முறையீட்டாளர் மற்றும் திருமதி. ஆண்டாள்ராணி அவர்களுக்கும் ஒரே மின்மாற்றி ஒரே தாழ்வழுத்த மின்னூட்டியில் தான் உள்ளது. மேற்கூறிய இருவரின் மதிப்பீட்டினையும் கூட்டாக தயாரிக்கும்படி கோரப்பட்டது. அவரது கோரிக்கையினை ஏற்க மறுத்ததோடு அப்போது உதவி செயற்பொறியாளர் மற்றும் பெரியகுளம் கோட்ட செயற்பொறியாளர் பொறுப்பினை தற்காலிகமாக வகித்த வந்த திரு. சுகுமாறனின் அனுமதி வாங்கி வரும்படி கூறப்பட்டது.

(vi) திரு. சுப்பிரமணியன் அவர்கள் திட்டமிட்டே மேல்முறையீட்டாளர் மற்றும் திருமதி. ஆண்டாள் ராணிக்கும் சேர்ந்து கூட்டு மதிப்பீடு தயாரிக்க கோரிக்கை வைக்ககூடும் என்று எண்ணி திருமதி. ஆண்டாள் ராணிக்கு முன்கூட்டியே பதிவு தொகையை வசூலித்தும் மேல்முறையீட்டாளரின் பதிவு தொகையினை வசூலிக்காமல் இருந்ததும் அவருக்கு கூட்டாக மதிப்பீடு தயார் செய்வதனை தவிர்த்து அவரை பழிவாங்கும் நோக்குடன் தான் செயல்பட்டுள்ளார் என்பது தெளிவாகும்.

(vii) மேல்முறையீட்டாளர் தனது மதிப்பீட்டினை ஏன் தயாரிக்கவில்லை என்ற கேள்விக்கு செயற்பொறியாளர் பார்வை **3**இல் கண்டுள்ள கடிதத்தில் மொத்தம் பெரியகுளம் கோட்டத்தின் வாயிலாக தேர்வாளர் முன் அறிவிப்பு (Notice )வழங்கப்பட்டது. மொத்தம் **65** பேர்களில் அதில் மின்இணைப்பு வழங்கியது போக மீதம் **49** நபர்கள் நிலுவையில் உள்ளதாக தெரிவித்துள்ளார். அவரது மின்இணைப்பிற்கான மதிப்பீடு தயார்

செய்வதினை நிறுத்திடுமாறு அரசு ஆணை ஏதுமில்லை என்றும் மேலதிகாரியின் வாய்மொழி உத்திரவின்படி நிறுத்தியதாகவும் கூறுகிறார்.

(viii) வாய்மொழி உத்திரவு வழங்கப்பட்டிருந்தால் மின்சாரம் வழங்கிட அனுமதிக்கப்பட்ட 16 பேர்களின் மதிப்பீடு மட்டும் தான் தயாரித்திருக்கவேண்டும். ஆனால் இவர்களால் யார் யாருக்கு பயனடைய வேண்டுமென்று நினைத்தார்களோ அந்த 49 பேர்களுக்கு மட்டும் மதிப்பீடு போட்டு நிறுத்திவிட்டார்கள்.

(ix) நுகர்வோர் குறைதீர்மன்ற கூட்ட முடிவாக மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான then the section officer will prepre the estimate in the order of Priority of remittance of the deposit at the secton office என்ற வரியினை மேற்கொள் காட்டி பக்கம் 2இல் கொடுத்துள்ளார். அதாவது ரசீது கொடுக்கப்பட்ட நாளான 29.5.2008 மற்றும் ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்ட நாளான தேதியைத் தான் முன்னுரிமையாக எடுத்துக் கொள்ள முடியமென தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் குற்றச்சாட்டே திரு. சுப்பிரமணியன் அவர்கள் அவரிடம் மதிப்பீட்டுக் கட்டணமே வசூலிக்க மறுத்ததால் தான் 26.5.2008 அன்று மேற்பார்வை பொறியாளருக்கு demand draft மூலம் பதிவு தொகையினை செலுத்தினார். பதிவு தொகையே வாங்க மறுத்தவர் அவரால் வழங்க வேண்டிய ஒப்புதல் எப்படி வழங்குவார் என்ற விபரத்தை 27.12.2011 நடைபெற்ற கூட்டத்திலேயே விளக்கமளித்துள்ளார்.

(x) மேற்பார்வை பொறியாளர் (ஊராக மின்பகிர்மான மற்றும் மேம்பாட்டு ) குறிப்பாணையில் (Memo) பாரா IV தெள்ள தெளிவாக கூறப்பட்டுள்ளது. அதில் மின் இணைப்பிற்கான மதிப்பீட்டு பதிவு தொகையினை மேற்பார்வை பொறியாளர் அவர்களின் பெயருக்கு ரொக்கமாகவோ அல்லது demand draft ஆகவோ எடுத்து செலுத்த வேண்டும். (remittance ) எனவும் ரசீது என்பது பதிவு தொகை செலுத்தியதற்கான அத்தாட்சி தானே

அன்று அதைத்தான் முன்னுரிமையாக (priority) எடுத்து கொள்ளும்படி கூறவில்லை . மேலும் remittance of the deposit at section office என்று குறிப்பிட்டுள்ளது. மேற்பார்வை பொறியாளருக்கு remittance செய்யும் போது அவரின் கட்டுப்பாட்டில் வட்ட அளவில் பல எண்ணிக்கையில் section office உள்ளது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் பெரியகுளம் கோட்டத்தை பொறுத்து, பெரிளகுளம் நகர், மேல்மங்கலம், தேவதானபட்டி மற்றும் கீழ வடகரை ஆகியவற்றை எடுத்துக் கொள்ளலாம். அதில் தேவதானப்பட்டி section ஒருவர் **8.5.2008** DD எடுத்திருப்பார். மேல்மங்களத்தின் sectionஇல் ஒருவர் **6.5.2008** DD எடுத்திருப்பார். மேல்முறையீட்டாளர் கீழ்வடகரை பிரிவின் முதல் நபராக **26.5.2008** DD எடுத்ததாக வைத்துப் பார்த்தால் , priority at section office என்ற வாசகம் இடம் பெறாமலிருந்தால் கீழ வடகரையில் முதல் நபராக remittance deposit செய்த எனக்கு மதிப்பீடு போட முடியாத நிலை. கீழவடகரை இளநிலைப்பொறியாளர், தேவதானப்பட்டி, பெரியகுளம் நகர் மேல்மங்கலம் section உள்ள பொறியாளர்களை **26.5.2008** வரை உங்கள் sectionஇல் பணம் கட்டியவர்களுக்கு மதிப்பீடு போட்டு விட்டீர்களா என கேட்டு அவர்கள் **26.5.2008** வரை பணம் செலுத்தியவர்களுக்கு போட்டு முடிக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிந்து அதன்பின் தான் கீழவடகரையில் முதல் நபராக பணம் கட்டியிருந்தாலும் மற்ற section **26.5.2008** பணம் செலுத்தியவர்களின் மதிப்பீடு தயாரித்த பின்பு தான் கீழவடகரையில் முதன்மை நுகர்வோரான மேல்முறையீட்டாளருக்கு மதிப்பீடு போடும் நிலை வரும். இதனை தவிர்க்கும் பொருட்டுதான் மேற்பார்வை பொறியாளர் (ஊரக மின் பகிர்மான மற்றும் மேம்பாடு ) சென்னை அவர்களின் உத்தரவில் மதிப்பீடு தயாரிக்க remittance of

deposit அந்த section office வாரியாக மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(xi) கீழவடகரையில் கூட்டு மதிப்பீடு போடும்படியான மேல்முறையீட்டாளர் கோரிக்கை திருமதி. ஆண்டாள் ராணி அவர்களால் பதிவு தொகை செலுத்தப்பட்ட நாள் **5.5.2008** அதன்பின் அவர் செலுத்திய தேதி **26.5.2008** இதற்கு இடையில் யாரும் பணம் கீழவடகரையில் செலுத்தவில்லை. **26.5.2008** அன்று அப்படி கட்டியவர்களில் மேல்முறையீட்டாளரும் ஒருவர் அவரும் திருமதி. ஆண்டாள் ராணி அவர்களுடன் சேர்த்து கூட்டு மதிப்பீடு தயார் செய்யக்கூடாது என்ற நோக்கத்துடன் தான் அவரிடம் திரு. சுப்பிரமணியன் பதிவுதொகை வாங்கிட மறுத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

**4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை :</u>**

எதிர்மனுதாரர் தன்னுடைய எதிர்மனுவில் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

(i) மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான தென்கரை கிராமம் புல எண்.**2524/1**இல் உள்ள குழாய் கிணற்றிற்கு சுய நிதி திட்டத்தின் (ரூ.**25000**) கீழ் புதிய விவசாய மின்இணைப்பு வழங்குவதற்கு **24.8.2004** தேதியிட்டு அளித்துள்ள கடிதத்தின்படி அத்திட்டத்தில் சேருவதற்கான பதிவு கட்டணமாக ரூ.**500/–** செலுத்துவதற்கான அறிவிப்புக் கடிதம் செயற்பொறியாளர் / பெரியகுளம் அவர்களால் க.எண்./செபொ/பெரி/தொநுஉ/கோ.**14**/அ.எண்.**950/08** நாள். –**4.2008** மூலம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்புக் கடிதத்தின் கடைசியில் சுயநிதி திட்டத்தின் அடிப்படையில்புதிய விவசாய மின்இணைப்பு தருவதற்கு இதர மின்வாரிய சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவதாக சம்மதக்கடிதம் தரவேண்டும் என்றும் நிபந்தனை வழங்கப்பட்டுள்ளது.

(ii) சுயநிதித்திட்டத்தின் கீழ் சேருவதற்கு பதிவு கட்டணமாக ரூ.5000/—ஐ செலுத்துவதற்கு கீழவடகரை பிரிவு அலுவலகத்திற்கு சென்ற மேல்முறையீட்டாளரும் இதே திட்டத்தில் முதன்மை கட்டணத்தை செலுத்த சென்ற திருவாளர்கள் 1) பி. முருகன் 2) சி. அஜ்மல்கான் 3) கி. மோதன்தாஸ் மற்றும் 4) க. மணிகண்டன் ஆகியோர் பிரிவுப் பொறியாளரை அணுகியுள்ளனர். இந்த ஐந்து பேர்களில் மேல்முறையீட்டாளரைத் தவிர மற்ற நான்கு பேர்களும் கீழவடகரை பிரிவு பொறியாளரால் வழங்கப்பட்ட மின் வாரியத்தினால் வடிவமைக்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தில் செயற்பொறியாளரின் அறிவிப்புக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு (நிபந்தனைக்குட்பட்டு) கையொப்பமிட்டு வழங்கிவிட்டு பதிவுக்கட்டணமும் அன்றே செலுத்தி அதற்கான நிலையான இரசீதும் பெற்றுச் சென்று விட்டனர். ஆனால் மேல்முறையீட்டாளர் பிரிவுப் பொறியாளரால் அவருக்கு வழங்கப்பட்ட சம்மதக்கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு அதில், அவ்வப்போது தமிழ்நாடு மின்வாரியம் நிர்ணயிக்கும் வருடாந்திர குறியீடு இவற்றிற்குள் அவரது விண்ணப்பம் அமையவில்லை எனில் அவருடைய முன்னுரிமையை அடுத்த ஆண்டிற்கு மாற்றி அமைக்கவோ, அல்லது ரத்து செய்யவோ மின்வாரியத்திற்கு உரிமையுண்டு என்பதை நன்கு அறிவேன் என்ற வாசங்களுக்கு அவர் ஒப்புக் கொள்ளாமல் அவருக்கு ரூ.500/— பதிவு கட்டணம் செலுத்திய ஒரு மாதத்திற்குள் புதிய விவசாய மின்இணைப்பு தரவேண்டும் என்று எதிர் மறையாக நிபந்தனை விதித்து மின்வாரியத்தினால் வடிவமைக்கப்பட்ட சம்மதக்கடிதத்தில் கையொப்பமிட்டு வழங்க மறுத்ததால் அன்றையதினம் மேல்முறையீட்டாளரிடம் பதிவுக் கட்டணம் ரூ.500/—ஐ பிரிவுப் பொறியாளரால் வசூலிக்க இயலவில்லை.

(iii) 26.5.2008 அன்று மேல்முறையீட்டாளர் தன் மீது தவறு இல்லை என்றால் கீழவடகரை பிரிவு அலுவலகத்திற்கு அருகிலேயே இருந்த உதவி செயற்பொறியாளர் /மேற்கு / பெரியகுளம் அவர்களிடம் அவரது குறையை முறையிட்டிருக்கலாம். அல்லது அன்றைய தேதியில் பணியிலிருந்த செயற்பொறியாளர் பெரியகுளம் அவர்களிடமாவது முறையிட்டிருந்தால் அவரது குறையினைப் போக்கி அன்றைய தினமே பதிவு கட்டணம் வசூல் செய்யவும் நிரந்த இரசீது வழங்கவும் அவர்கள் வழிவகை செய்திருப்பார்கள்.

(iv) மேல்முறையீட்டாளர் கொடுத்த வங்கி வரைவோலையானது மேற்பார்வை பொறியாளர் தேனி அலுவலகத்திலிருந்து 29.5.2008 அன்று கீழவடகரை பிரிவு அலுவலரால் பெறப்பட்டு வாரிய விதிமுறைகளின்படி சம்மதக் கடிதம் பெறப்படுவதன் அவசியத்தை எடுத்துரைத்து அதனை மேல்முறையீட்டாளர் ஒப்புக் கொண்டு 29.5.2008 என்று தேதியிட்டு அவர் சம்மதக்கடிதம் வழங்கிய பின்னர் அவரது வரைவோலைக்கான நிலையான இரசீது கீழவடகரை பிரிவு அலுவலரால் அன்றே அவருக்கு வழங்கப்பட்டு அவர் செலுத்திய பணம் மின்வாரிய கணக்கில் 29.5.2008 அன்று தான் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு மனுவில் இணைத்துள்ள தலைமையிடத்து குறிப்பாணை எண். SE/RE/& I9D) SES/6077/92 St. C.No.679 (Tech Branch ) Dt. 14.2.1992 இல் அறிவுறுத்தியுள்ளபடி கீழவடகரை பிரிவில் சுயநிதித்திட்டம் வகை புதிய மின்இணைப்பு வேண்டி பதிவு கட்டணம் ரூ.500/– செலுத்திய தேதி வாரியாக பட்டியலிடப்பட்டு அப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. வாரிய விதிமுறைகளின்படி கீழவடகரை பிரிவுப் பொறியாளர் அவர்களால் வரிசைக் கிரமமாகத்தான் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

(v) திரு. எஸ். அஜ்மல்கான் மற்றும் மூன்று நபர்களுக்கான ஒரே மதிப்பீடு 5.6.2008 அன்று பிரிவுப் பொறியாளர் அவர்களால் தயாரிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளர் / மேற்கு பெரியகுளம் அவர்களால் 7.6.2008 அன்று சான்றொப்பமிட்டு செயற்பொறியாளர் அவர்களுக்கு சமர்ப்பித்து 12.6.2008 அன்று கூடுதல் பதிவு வகித்த செயற்பொறியாளர், தேனி அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டள்ளது.

(vi) உதவி செயற் பொறியாளர்/மேற்கு பெரியகுளம் அவர்கள் பதவி உயர்வின் காரணமாக 16.6.2008 அன்று செயற்பொறியாளர்/பெரியகுளம் ஆக பணியேற்பு செய்தபின் மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டின் உள்பக்கம் செயற்பொறியாளர்களின் கையொப்பம் இல்லாததால் 17.6.2008 அன்று செயற்பொறியாளர் என்ற முறையில் கையொப்பமிட்டுள்ளார்.

(vii) 12.6.2008 அன்றைய தேதி வரை பெரியகுளம் கோட்டத்தில் சுயநிதிதிட்டம் வகை IBயில் மொத்த மதிப்பீட்டுத்தொகை செலுத்தி காத்திருப்போர் 65 பேர். இதில் தேனியின் பகிர்மான வட்டத்திற்கு 2008–2009 ஆம் ஆண்டிற்கான குறியீடாக மொத்தம் 27 என நிர்ணயம் செய்து Memo No. SE/RE & I (D)/ EE/RE/AEE1/F.Doc.D.No.1297/08 dt. 25.8.2008 இன்படி தேனி மேற்பார்வைப் பொறியாளர்/தேனி மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு வரப்பட்டு அதன் பின்னர் இந்த 27இல் பெரியகுளம் கோட்டத்திற்கு 16 என குறியிலக்கு பிரித்தளிக்கப்பட்டு இந்த விபரத்தை அன்றைய தினம் பெரியகுளம் கோட்டப் பொறியாளராக பதிவு வகித்த தேனி செயற்பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்த போது அன்றைய தேதியிலேயே 16பேர்க்கு இத்திட்டத்தின் கீழ் மின்இணைப்புகள் கொடுத்து விட்டபடியால் மேற்கொண்டு இந்த திட்டத்தின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டாம் என்று அன்றையதினம் பெரியகுளம் கோட்டத்திற்கு செயற்பொறியாளராக பதிவு வகித்த தேனி கோட்ட செயற்பொறியாளர் பெரியகுளம்

கோட்டத்தைச் சேர்ந்த அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கும் தொலைபேசி மூலம் தெரிவித்தார். இதன் வெளிப்பாடாக 3.1.2009 அன்று தேனி மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைக்குறிப்பு நகலில் இவ்விபரங்கள் பதிவுச் செய்யப்பட்டு அன்றைய தேதியில் கட்ஆப் தேதி அதாவது மதிப்பீடு தயார் செய்யப்படவேண்டிய தேதி 31.10.2007 வரை பதிவுத்தொகை செலுத்தியவர்களுக்கு மட்டுமே என்று குறிப்பிட்டுள்ளதை மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளதை மறைத்து தற்போது புகாராகக் குறிப்பிட்டுள்ளார்.

(viii) சுயநிதி திட்டத்தின் கீழ் கீழவடகரைப் பிரிவில் பதிவுக் கட்டணமாக ரூ.500/– செலுத்தியவர்களின் பட்டியலில் மேல்முறையீட்டாளரின் பெயர் வரை உள்ள பட்டியல்படி முதலில் 5.5.2008 அன்று பணம் செலுத்தியவர் திருமதி. பா. ஆண்டாள் ராணி அவர்கள் மேல்முறையீட்டாளர் 29.5.2008 அன்று முதன்மைக் கட்டணம் செலுத்தி பட்டியலில் 12ஆவதாக உள்ளார்கள். ஒரே மின்னூட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு ஒரே மதிப்பீடு தயார் செய்யவேண்டும் என்ற விதிமுறைப்படி மதிப்பீடுகள் தயார் செய்ய வேண்டும் எனில், மேல்முறையீட்டாளரின் வரிசை எண். வரை ஒரே நாளில் வரிசை எண்.1 முதல் 12 வரை உள்ள நபர்களுக்கு மொத்தமாக மதிப்பீடுகளை தயார் செய்து சமர்ப்பித்து அதற்கான வரிசைப்படி ஒப்புதல் பெறப்படல்வேண்டும் ஒரே நாளில் 12 பேர்களுக்கும் கள அளவீடு செய்து மதிப்பீடுகள் தயாரித்து சமர்ப்பிப்பது என்பது தொழில்நுட்ப முறையில் சாத்தியமற்றது. அதே நேரத்தில் வரிசை எண். 2 முதல் 11 வரை உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்காமல் வரிசை எண்.1இல் உள்ள திருமதி. பா. ஆண்டாள் ராணி அவர்களுக்கும் வரிசை எண்.12இல் உள்ள மேல்முறையீட்டாளருக்கும் ஒன்றாக

மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்தாலும் விதிமுறை மீறலாகும். திருமதி. ஆண்டாள் ராணி அவர்களுக்கும் மேல்முறையீட்டாளருக்கும் மதிப்பீடு தயாரிக்க வேண்டிய மின்மாற்றி சோத்துப்பாறை மின்மாற்றி XII ஆகும். திரு. அஜ்மல்கான் மற்றும் மூன்று பேர்களுக்கும் மதிப்பீடு தயாரிக்க வேண்டிய மின்மாற்றியானது சோத்துப்பாறை SSI ஆகும் வெவ்வேறு மின்மாற்றிகளில் மதிப்பீடு தயார் செய்ய வேண்டியிருப்பதாலும் வாரிய அறிவுறுத்தலின்படி பதிவுத்தொகை செலுத்திய வரிசையின்படி மதிப்பீடு தயார் செய்ய வேண்டியதாலும் அன்றைய தினம் கீழவடகரை பிரிவு பொறியாளர் அவர்கள் மதிப்பீடு தயார் செய்தது சரியானதே அன்றி எவ்வித விதிமீறலும் செய்யவில்லை.

(ix) கீழவடகரை பிரிவுப் பொறியாளர் சுயநிதித்திட்டத்தின் கீழ் எவ்வாறு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெறவேண்டும் என்ற விதிமுறைகளின்படி தான் மதிப்பீடுகள் தயார் செய்தாரே ஒழிய உதவி செயற்பொறியாளர்/மேற்கு/பெரியகுளம் அவர்களின் அறிவுரைப்படி அல்ல. வேறு உள்நோக்கம் எதுவும் இல்லை. மேல்முறையீட்டாளர் தன்னுடைய பொய்யான புகாருக்கு வலு சேர்ப்பதற்காக பொறியாளர்கள் மீது பழி சுமத்தி உள்ளார்.

(x) மேல்முறையீட்டாளர் சுயநிதிதிட்டம் வகை IBயில் சேருவதற்கு பதிவுக் கட்டணம் ரூ.500/−க்கான வரைவோலையை 26.5.2008 அன்று மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்கு தபாலில் அனுப்பி வைத்துவிட்டால் அன்றைய தினத்தையே அவர் பணம் செலுத்திய தினமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று 27.12.2011 என்று தேதி மின்பகிர்மான வட்ட நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் குறிப்பிட்டமைக்கும் அன்றைய தேதியில் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த தலைமை அலுவலக சுற்றறிக்கை குறிப்பாணை எண். SE/RE/& I(D) /D/SES/6077/92 St. C.No.697 (Tech Branch ) Dt. 14.2.1992ஐ மேற்கோள் காட்டி நுகர்வோர் மன்றத்திலிருந்து க.எண்.

மேபொ/தேமிபவ/தேனி/உசெபொ/உ பொ/மே/உபொ/ கோ.தமிநுகுமீ/அஎ.ண009/2012 இன் மூலம் மிகத்தெளிவாக பதில் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதனை மேல்முறையீட்டாளர் ஏற்காமல் அக்குறிப்பாணையில் கண்டுள்ள விபரத்தை தவறாக மொழி மாற்றம் செய்து அவர் பணம் செலுத்திய தேதி 29.5.2008 என்பதை ஒப்புக் கொள்ளாமல் வரைவோலை எடுக்கப்பட்டு மத்திய அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட 26.5.2008லேயே பணம் செலுத்திய தினமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று குறிப்பிடுவது ஏற்படையது அல்ல.

(xi) அடுத்தவர்களுக்கு செயற்பொறியாளர் / பகிர்மானம் / பெரியகுளம் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ள கூட்டுமதிப்பீடானது முறைகேடாக உள்ளது என்பது மேல்முறையீட்டாளரின் நிலத்திற்கு விவசாய மின்இணைப்பு வழங்கப்படுவதற்கு அப்பாற்பட்ட விசயம் தான் இருப்பினும் நீதியின்பால் மேற்படி அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை ஆய்வு செய்வதற்கு ஒரு செயற்பொறியாளர், ஒரு உதவி செயற்பொறியாளர் ஒரு இளநிலை பொறியாளர் ஆகியோர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவினர் ஆய்வுசெய்து கொண்டுள்ளனர். அவர்கள் வழங்கும் அறிக்கையின்படி முறைகேடு எதுவும் தெரியவந்தால் உரிய பொறியாளர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. மேல்முறையீட்டாளரி<u>ன் மறுப்புரை</u> :**

எதிர்மனுதாரரின் பதிலுரைக்கு மறுப்புரையாக கீழ்கண்டவற்றை மேல்முறையிட்டாளர் தெரிவித்துள்ளார். அவருடைய மறுப்புரையில் ஏற்கெனவே அவரின் மேல்முறையீட்டு மனுவில் இல்லாத வாதங்கள் மட்டுமே இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

(i) மேற்பார்வை பொறியாளரால் இதர மின்வாரிய சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவதாக சம்மதக் கடிதம் தரவேண்டும் என்று செயற்பொறியாளர்/பெரியகுளம் அவர்களால் க.எண்.செபொ/பெரி/தொ.ந/உ/கோ.14/அ.எண்.950//08 நாள். 4.2008 மூலம் தெரிவித்தாக தெரிவித்துள்ளார். பார்வை 4இல் கண்டுள்ள செயற்பொறியாளர் அவர்களின் கடிதத்தில் விதிமுறைகளும் பொருந்தும் என்று தான் உள்ளதே தவிர மேற்பர்வை பொறியாளரால் சொல்லப்பட்டது போல் சம்மதக்கடிதம் கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை.

(ii) 26.5.2008 அன்று இளநிலைப் பொறியாளரை முதல் நபராக சந்தித்தார். அவரது உறவினரை கண்டதும் இளநிலைப்பொறியாளர் அவர்கள் நீங்கள் ஏன் வந்தீர்கள் என கேட்டார். அதற்கு அவரது உறவினர் திரு. ராமசாமி அவர்கள் அவரது மாமா தான் அவருக்கு அலவலக நடைமுறை தெரியாததால் அவர் உடன் வந்தார் எனக்கூறினார். அதற்கு இளநிலைப்பொறியாளர் நாங்கள் அவர்கள் விசயத்தை deal செய்து கொள்வோம். நீங்கள் வெளியே போகலாமென்று கூறி வெளியே அனுப்பி விட்டார். அதன்பின் இளநிலைப்பொறியாளர் மேல்முறையீட்டாளர் அவரது உறவினர் மீது உள்ள கோபத்தில் காலக்கெடு உள்ளது. எனவே 29.5.2008 அன்று பதிவு தொகை பெற்றுக் கொள்வதாகத் தான் சொன்னார். மேற்பார்வை பொறியாளர் கூறுவது போல் இளநிலைப்பொறியாளரால் மேல்முறையீட்டாளருக்கு ஒப்புதல் கடிதம் கொடுக்கவும் இல்லை.

(iii) மேலும் மேல்முறையீட்டாளர் ஒப்புதல் கடிதத்தை படித்ததாகவும் அதில் வருடாந்திர குறியிடு இவற்றிற்குள் அவரது விண்ணப்பம் அமையவில்லை. எனில் அவரது முன்னுரிமையை அடுத்த ஆண்டிற்கு மாற்றி அமைக்கவோ அல்லது ரத்து செய்யவோ மின்வாரியத்திற்கு உரிமையுண்டு என்பதனை நன்கு அறிவேன் வாசகங்களை அவர்

ஒப்புக்கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மேல்முறையீட்டாளர் இரண்டாம் வகுப்பு வரைதான் பயின்றவர். மூன்றாம் வகுப்பிற்கு சென்று பள்ளிபடிப்பை குடும்ப சூழ்நிலையால் தொடர முடியாததால் படிப்பை விட வேண்டியதாயிற்று. அப்படி முழுமையாக தமிழ் படித்து விசயங்களை தெரிந்து கொள்ளும் அளவுக்கு அவரது தெரியாது. இதனால்தான் குறைதீர்மன்ற நடவடிக்கையில் நடக்கும் எழுத்துபூர்வமான விபரங்களை படித்து தெரிந்து கொள்ள மேல்முறையீட்டாளர் தனது உறவினரை அழைத்து வந்தார். அப்படி இருக்க மேற்பார்வை பொறியாளரால் சொல்லப்பட்டது எவ்வளவு பெரிய பொய் என்பதை தெரிந்துகொள்ளலாம். அதோடு மட்டுமன்றி பார்வை 8இல் கண்டுள்ள உதவி செயற்பொறியளரின் கடிதத்தில் முன்பணம் செலுத்தும்போது ஒப்புதல் கடிதம் அளித்துவிட்டு பணம் செலுத்தும்படி நேரடியாக தெரிவித்ததாகவும், ஆனால் ஒப்புதல் கடிதம் கொடுக்காமலே ரூ.500/– மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பித்துள்ளீர்கள். என இளநிலைப் பொறியாளர் கூறியுள்ளார் என தெரிவித்துள்ளார். ஒப்புதல் கடிதம் வழங்க வேண்டுமென்று செயற்பொறியாளர் தேர்வு கடிதத்திலே உள்ளது என்றும் 1. 2இளநிலைப் பொறியாளர் ஒப்புதல் கடிதம் வழங்கியதாகவும் அதில் உள்ள நிபந்தனைகளை மறுத்ததாகவும் மேற்பார்வை பொறியாளருக்கு.500/– நேரடியாக அனுப்பிவைத்தாகவும் உதவி செயற்பொறியாளரும் மூன்று கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இது அனைத்து சுத்த பொய் எனக்கு படிக்க தெரியாது என்பது தான் உண்மை.

(iv) திருவாளர்கள் அஜ்மல்கான், மோகன்தாஸ், மணிகண்டன், மற்றும் வையாபுரி அவர்களின் மதிப்பீட்டு கூட்டாக தயாரிக்கும் நோக்குடன் தான் அவர்கள் பதிவுத்தொகை செலுத்தும் வரை வேறு நபர்களிடம் திரு சுப்பிரமணியம் பதிவுத்தொகை வாங்க மறுத்துள்ளார். இதற்கு காரணம் இவர்கள் நால்வருக்கும் மதிப்பீடு தயார்

செய்ததில் **1200** running meter வயர் பழைய சென்றதை புதிய வயர் நிறுவுவதாக மதிப்பீடு தயார் செய்துள்ளனர். இதில் **1200** meter வயர் பொருத்தாமலேயே பொறுத்தியதாகவும் அதற்கு தேவையான உபகரணங்களை நிறுவாமலே முறைகேடு செய்துள்ளதாக புகார் தெரிவித்துள்ளேன்.

(v) மேலும் அப்படி மதிப்பீடு தயாரித்ததில் மதிப்பீட்டில் **12.6.2008** அன்று செயற்பொறியாளர் தேனி அவர்கள் பெரியகுளம் பதிவு வகித்த போது மதிப்பீட்டின் முன் பக்கம் மட்டும் பதிவு செயற்பொறியாளர் தேனி கையொப்பமிட்டுள்ளதாகவும் உள்பக்கம் sanction செய்த பகுதியில் கையொப்பமிடாமல் சென்று விட்டதால் திரு சுகுமாரன் **16.6.2008** அன்று பதவி ஏற்றதும் மீதி உள்ள மதிப்பீட்டின் பக்கங்களில் கையொப்பமிட்டதாக மேற்பர்வை பொறியாளரின் விளக்கம் உள்ளது. இதில் அவரது கருத்தாக தெரிவிப்பது என்னவென்றால் மதிப்பீடு என்பது மிக முக்கியமான ஆவணம் அப்படிப்பட்ட ஆவணத்தில் sanction செய்பவர் முழுமையான அனைத்து பக்கங்களிலும் sanction செய்யும் தேனி செயற்பொறியாளர் உள்பக்கங்களில் கையொப்பமிடாமல் திருப்ப தொழில்நுட்ப உதவியாளரிடம் மதிப்பீடு கோப்பு (file) வரும் சமயம் அதில் விட்டு போன கையொப்பமிடும் பகுதியில் மீண்டும் பொறுப்புச் செயற்பொறியாளரிடம் கையொப்பம் பெற்றிருக்க வேண்டும். அப்படி நடக்கவில்லை. புதிதாக செயற்பொறியாளர் பதவியினை ஏற்ற திரு சுகுமாரன் அவர்களது உள்பக்கம் கையொப்பம் விடுபட்டுள்ளது. அதனை பொறுப்புச் செயற்பொறியாளருக்கு மீண்டும் மதிப்பீட்டினை அனுப்பி வைத்து கையொப்பம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் முன்பக்கம் **12.6.2008** sanction செய்யப்பட்டதாக ஒரு செயற்பொறியாளர் கையொப்பமிடுகிறார். உள்பக்கம் மிக முக்கியமான பொருட்கள் மதிப்பீடு செய்யும் தாள்களில் திரு சுகுமாரன் கையொப்பமிட்டுள்ளார்.

(vi) 12.6.2008 அன்று வரை பெரியகுளம் கோட்டத்திற்கு 27 குறியிலக்கு என்று பிரித்து அளிக்கப்பட்டதாகவும் அதன்படி தேனி செயற்பொறியாளர் அவர்கள் ஆய்வில் 16 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் மின்இணைப்பு கொடுத்துவிட்டபடியால் இனி இத்திட்டத்தின் கீழ் மதிப்பீடு தயார் செய்ய வேண்டாமென்று அனைத்து உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கும் தொலைபேசி மூலம் தகவல் தேனி செயற்பொறியாளர் அவர்கள் பெரியகுளம் பொறுப்பு மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், இதே தகவலினை பெரியகுளம் கோட்ட தொழில்நுட்ப உதவியாளரும் உதவி செயற்பொறியாளர்களுக்கு தகவல் தெரிவித்ததாகவும் தெரிவித்துள்ளார். அதன்பின் 3.1.2009 அன்று மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தின் நடவடிக்கைக்குறிப்பு (minutes) 31.10.2007 வரை பதிவுத்தொகை செலுத்தியவர்களுக்கு மட்டும் மதிப்பீடு தயார் செய்ய வேண்டிய காலமாக நிர்ணயித்ததாக கூறியுள்ளார். கீழவடகரை பிரிவில் பதிவு தொகையாக ரூ.500/– செலுத்தியவர்கள் எண்ணிக்கை 12 நபர்கள் இவர்களில் மொத்தம் 6 நபர்களுக்கு 28.5.2008 வரை உள்ளவர்கள் இதில் வையாபுரிக்கும் மட்டும் மதிப்பீடு தயார் செய்துவிட்டு அவர் பதிவு தொகை செலுத்திய 28.5.2008 அன்று பதிவு தொகை செலுத்திய ரேணுகாதேவி, பெ. கருத்தப்பாண்டி, சந்திரகாசன் ஆகிய மூன்று பேர்களின் மதிப்பீட்டையும் கூட தயாரிக்காமல் விட்டுள்ளார்கள். எனவே சுப்பிரமணியன் மற்றும் சுகுமாரன் ஆகிய இருவரும் மேலே சொன்ன கூட்டு மதிப்பீடு தயார் செய்ததில் வயரிங்முறை கேடு செய்யும் நோக்குடனும் மற்றும் மேற்சொன்ன 4 நான்கு நுகர்வோரிடமும் ஏதோ பிரதிபலன் பெற்று செயல்பட்டுள்ளதாக சந்தேகம் எழுகிறது.

(vii) இந்த நால்வரும் பணம் செலுத்தி பத்து தினங்களிலேயே மதிப்பீட்டு தயாரித்துள்ளார். அதன்பின் பதிவு தொகையாக செலுத்திய நான்கு பேர்களாகிய திருமதி. ரேணுகா தேவி , கருத்தப்பாண்டி , திரு. சந்திரசேகரன் , திரு. இப்ராஹிம்கரிம் ஆகிய நால்வரின் மதிப்பீடும் பெரியகுளம் தேனி செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து தொலைபேசி செய்தியாக தெரிவிக்கப்பட்ட தேதியான 25.8.2008 வரை உள்ள காலக்கெடு 80 நாட்கள் ஆகும். மேலே சொன்ன நபர்களுக்கு 10 நாட்களில் மதிப்பீடுபோட முடிந்த இளநிலைப்பொறியாளருக்கு 80 நாட்கள் ஆகியும் மற்றவர்களுக்கு போடாமல் விட்டது வீண் காலதாமதம் ஊழலுக்கு வழியாகும் என்ற சொல் வழக்கத்திற்கு உதாரணமாகும்.

6. <u>மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை</u> :

மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரின் வாதங்களை நேரிடையாக எடுத்து சொல்வதற்கு வசதியாக 22.5.2012 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

7. <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u> :

7.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. பி. பழனியப்பன் அவர்களும், திரு. ரா. மகேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டு, அவர்களது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தனர்.

7.2 திரு. பி. பழனியப்பன் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவில் உள்ள தகவல்களை தெரிவித்தார்.

7.3 மேலும், அவர் தானும் மேல்முறையீட்டாளரின் மகன் திரு. ரா. மகேஸ்வரன் மற்றும் மேல்முறையீட்டாளர் ஆகிய மூவரும் இளநிலைப்பொறியாளரை சந்தித்ததாகவும் அப்பொழுது அவர் தன்னையும் திரு. ரா. மகேஸ்வரனையும் வெளியேஅனுப்பிவிட்டதாகவும், அப்பொழுது ஒப்புதல் கடிதம் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை என்றும், மேல்முறையீட்டாளர் 2ஆம் வகுப்பு

வரைதான் படித்தவர் என்பதால் அவர் அந்த ஒப்புதல் கடிதத்தை படித்து அதன் சரத்துக்களை புரிந்து மறுப்பு சொல்லகூடிய அளவுக்கு படிப்பறிவு உடையவர் அல்லர் என்றும் எனவே ஒப்புதல் கடிதம் தர மறுத்து பணம் கட்டவில்லை என்பது தவறு என்று வாதிட்டார். மேலும், தனக்கும் இது போன்ற நிகழ்வு இருந்ததால்தான் மேல்முறையீட்டாளரிடம் பணத்தை மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பி பதிவு செய்து கொள்வோம் என்று கூறியதாக தெரிவித்தார்.

7.4 மேலும் அவர் திருவாளர்கள் அஜ்மல்கான், மோகன்தாஸ், மணிகண்டன் மற்றும் வையாபுரி ஆகியோர் அனைவருக்கும் கூட்டு மதிப்பீடு தயாரிக்க வேண்டும் என்ற காரணத்தினால் தான் தங்களின் பதிவுகட்டணம் 26.8.2008 அன்று வாங்கப்படவில்லை என்று தெரிவித்தார். அவர் தன்னுடைய விவசாய மின்இணைப்புக்கு இதுபோன்ற ஒரு பிரச்சனை வந்த பொழுது தான் அன்றிருந்த மேற்பார்வை பொறியாளருக்கு வங்கி வரைவோலை மூலம் பணம் செலுத்தி மின்இணைப்பு பெற்றதையும் தெரிவித்து அதனால்தான் இளம் பொறியாளர் தன்னை வெளியே அனுப்பிவிட்டு மேல்முறையீட்டாளரிடம் பதிவு பணம் வாங்க மறுத்ததாக கூறினார்.

7.5 மேலும், அவர் 26.5.2008 தன்னுடைய வங்கி வரைவோலையை மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் பெறப்பட்டதால், அந்த நாளைத்தான் தன்னுடைய பணம் செலுத்திய நாளாக கணக்கிட வேண்டும் என்றும், அவ்வாறு கணக்கிட்டால், தன்னுடைய முன்னுரிமை திருமதி. ஆண்டாள் ராணி அவர்களுக்கு அடுத்து வரும் என்றும் எனவே இருவருக்கும் சேர்த்து கூட்டு மதிப்பீடு செய்திருக்க வேண்டும் என்றும் கூறினார்.

7.6 மேலும், அவர் மேல்முறையீட்டாளரும் திருமதி. ஆண்டாள் ராணி அவர்களும் ஒரே மின்மாற்றியிலிருந்துதான் அதாவது சேத்துப்பாறை மின்மாற்றி எண். XII லிருந்து விவசாய மின்இணைப்பை பெற வேண்டியது என்பதால் தனக்கும் திருமதி. ஆண்டாள் ராணிக்கும் கூட்டு மதிப்பீடு தயார் செய்திருந்தால்தான் மதிப்பீடு தொகை கட்டவேண்டியது வந்திருக்காது என்றும் குறிப்பிட்டார்.

7.7 மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி மேல்முறையீட்டாளருக்கு 2008ஆம் ஆண்டிலேயே அவர் பதிவு பணம் கட்டியவுடன் மதிப்பீடு தயார் செய்திருந்தால் அது 2008–09 ஆம் ஆண்டிற்கான விலைப்பட்டியலின்(cost data) படி தயாரிக்கப்பட்டிருக்கும் . ஆனால், அது 2010–11ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதால்தான் அதிகமாக பணம் செலுத்த வேண்டியது ஆயிற்று என்றும் கூறினார். அந்த இழப்பு ஈடுசெய்யப்படவேண்டும் என்றும் கூறினார்.

7.8 மேல்முறையீட்டாளரின் மகன் திரு. ரா. மகேஸ்வரன் அவர்கள் தன்னுடைய தகப்பனாரின் ஒப்புதல் கடிதத்தில் கையொப்பம் வாங்கி , ஒப்புதல் கடிதத்தை 29.5.2008 காலை 8 மணிக்கே இளமின்பொறியாளர் அலுவலகத்தில் சேர்த்தும் 29.5.2008 அன்று பணம் செலுத்தியவர்களில் தன்னை மூன்றாவது நபராக வரிசைப் படுத்தியுள்ளதாக கூறினார்.

7.9 திரு. பழனியப்பன் அவர்கள் திருவாளர்கள் அஜ்மல்கான், மோகன்தாஸ், மணிகண்டன் மற்றும் வையாபுரி அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டு மதிப்பீட்டில் வயர்களின் தேவையை அதிகமாக காட்டுவதற்காக ஏற்கெனவே 4 வயர்கள் இருந்ததை 2 வயர்கள் மட்டும் இருந்ததாக (LT single phase 2 wire) பதிவு செய்து தவறு செய்துள்ளதாகவும், அதற்காகதான் மேல்முறையீட்டாளரிடம் பதிவுகட்டணம் பெறுவதற்கு தாமதப்படுத்தப்பட்டதாகவும் அறிவித்துள்ளார்.

## 8. <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u> :

8.1 எதிர்மனுதாரரின் பிரதிநிதியாக பெரியகுளம் செயற்பொறியாளர் / பகிர்மானம், திரு. சுகுமாறன் அவர்கள் கலந்து கொண்டார்.

8.2 செயற்பொறியாளர் /பெரியகுளம் அவர்களும், எதிர்மனுவில் உள்ள தகவல்களையே மீண்டும் தெரிவித்தார். அவர் மேல்முறையீட்டாளர், இளம் பொறியாளர், பதிவுக்கட்டணம் வாங்க மறுப்பதையோ அல்லது ஒப்புதல் கடிதம் வழங்குவதில் உள்ள சிரமங்களை தன்னிடம் தெரிவித்திருந்தால் அவரின் குறைகள் அப்பொழுதே நிவர்த்திக்கப்பட்டு பதிவுக்கட்டணம்

26.5.2008 அன்று கட்டுவதற்கு தான் அன்றைய தேதியில் உதவி செயற்செயற்பொறியாளர் என்ற முறையில் ஏற்பாடு செய்திருக்க முடியும் என்று கூறினார். மேலும் இளமின்பொறியாளர் அலுவலகம் உள்ள அந்த வளாகத்திலே உள்ள மற்ற மேலதிகாரிகளான உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரில் யாரையும் சந்தித்து தன்னுடைய குறையை முறையீடு செய்யாமல், அவர் பதிவு பணத்தை வங்கி வரைவுவோலை (Demand Draft ) ஆக மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பியிருக்க வேண்டாம் என்றும் கூறினார்.

8.3 மேலும், ஒப்புதல் கடிதம் கொடுக்க மறுத்ததினால்தான் இளமின் பொறியாளர், பதிவு பணத்தை 26.5.2008 அன்று பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

8.4 திரு. ஆண்டாள் ராணி அவர்களுடன் சேர்த்து கூட்டு மதிப்பீடு செய்யாமைக்கு காரணம் திருமதி. ஆண்டாள் ராணி அவர்கள் வரிசையில் முதலிலும் திரு. இராமசாமி அவர்கள் வரிசை எண். 12லும் உள்ளதால்தான் மதிப்பீடு கூட்டாக தயாரிக்க முடியவில்லை என்று கூறினார்.

8.5 தங்களுடைய மேலதிகாரி அதாவது தேனி கோட்டம் செயற்பொறியாளர் (பொறுப்பு) வகித்த அவர்கள் 12.6.2008 அன்று சுயநிதிதிட்டம் ரூ.25,000/– கீழ் எந்த மதிப்பீடும் தயாரிக்க வேண்டாம் என்று அனைத்து உதவி செயற்பொறியாளர்களுக்கும் தெரிவித்ததாக கூறினார். மேலும், அதற்கு ஆதாரமாக ரூ.25000/– சுயநிதி திட்டத்தில் 6/2008 மாதத்தில் மின்இணைப்பு கூடாது என தேனி மேற்பார்வை பொறியாளர் அவர்கள் தொலைபேசியில் 12.6.2008 அன்று தெரிவித்துள்ளார்கள் என்று பதிவேட்டில் (register)இல் எழுதப்பட்டிருந்ததை சமர்ப்பித்தார். ஆனால் அதில் யாருடைய கையொப்பமும் இல்லை.

8.6 மேலும், அவர் திரு. அஜ்மல்கான் மற்றும் வையாபுரி ஆகியோருக்காக அனுமதிக்கப்பட்ட கூட்டுமதிப்பீடானது முறைகேடாக உள்ளது என்பதை ஆய்வு செய்ய செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், மற்றும் இளம் பொறியாளர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

எனவும் அந்த குழுவின் அறிக்கையின்படி ஏதேனும் முறைகேடு இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

9. <u>மேல்முறையீட்டாளரின் எழுத்துபூர்வமான மற்றும் வாய்மொழி விவாதங்களும் :</u>

விசாரணையில் கலந்து கொண்ட பின்பு மேல்முறையீட்டாளர் தன்னுடைய எழுத்துபூர்வமான விவாதங்களை 28.5.2012 இல் அனுப்பியுள்ளார். அதில் அவரின் மனு மற்றும் நேரடி விசாரணையில் தெரிவிக்கப்படாத, வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) முறையாக செயற்பொறியாளர் அவர்கள் பயனாளிகள் தேர்வு அறிவிப்பு கடிதத்துடன் ஒப்புதல் கடிதத்தையும் இணைத்து அனுப்பியிருக்க வேண்டும். அப்படி இணைக்காமல் செயற்பொறியாளர் தன்னுடைய கடமையிலிருந்து தவறியுள்ளார். மேலும் இளநிலைப் பொறியாளராவது ஒப்புதல் கடிதத்தினை முறையாக வழங்கியிருக்க வேண்டும். அதையும் செய்யவிலை. இப்படி இவர்கள் தங்கள் கடமையினை ஒழுங்காக செய்யாததற்கு பதிலாக நடவடிக்கை எடுப்பதை விடுத்து அவர் ஏதோ ஒப்புதல் கடிதத்தில் உள்ள சில வாசகங்களை படித்து விட்டு ஒப்புதல் கடிதம் கொடுக்க மறுத்ததாக கூறியுள்ளார். மேல்முறையீட்டாளர் படித்ததோ ஒன்றாம் வகுப்புதான் அப்படியிருக்க கொடுக்காத ஒப்புதல் கடிதத்தை அவர் படித்ததாகவும் அதில் உள்ள வாசகங்களை மறுத்ததாகவும் சொல்வது பொய்யாகும் என்பதனை விளக்கமாக மின்குறைதீர்ப்பாளரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் அலுவலக நடைமுறைகளை நுகர்வோருக்கு விளக்கி வழிநடத்த தவறியுள்ளார்கள்.

மேல்முறையீட்டளாரிடம் 26.5.2008 remittance க்காக இளநிலைப் பொறியாளரால் வழங்கப்பட்ட இரசீதிலேயே 26.5.2008க்கான DD.க்கான ரசீது என்றுதான் குறிக்கப்பட்டுள்ளது. முறையாக செலுத்தவேண்டிய அதிகாரி மேற்பார்வை பொறியாளரிடம் அவர் செலுத்திவிட்டார். வழங்கப்பட்ட DD.க்கு உரிய தேதிக்குள் ரசீது வழங்கும்படி வலியுறுத்த வேண்டியது மேற்பார்வை பொறியாளர். மேற்பார்வை பொறியாளர் காலதாமதமாக இளநிலைப் பொறியாளரிடம் வழங்கியதற்கு மேல்முறையீட்டாளர் மீது குற்றம் சுமத்துவது நியாயமில்லை. மேல்முறையீட்டாளர் மேலே சொன்ன சென்னை SE/RE அவர்களின் Memo 4வது பாரா வில் குறிப்பிட்டுள்ளபடி 30 தினங்களுக்குள் ஒப்புதல் கடிதமும் கொடுத்து விட்டார். 30 தினங்கள் கடந்து கொடுத்திருந்தால் தான் அவர் மீது குற்றம் சுமத்தலாம் என்பதனை மின்குறைதீர்ப்பாளர் மேலான கவனத்திற்கு மேல்முறையீட்டாளரின் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளார்கள்.

(ii) SE/RE & I(D)/SES/6077/92 St CNS 687 (Tech Branch ) dated 14.2.1992 உத்தரவில் date of remittance தான் மதிப்பீடு தயார் செய்ய எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உள்ளது. குறைதீர்மன்றத்தில் சொல்வது போல் ஒப்புதல் கடிதத்தையும் remittance சோடு சேர்த்து கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை, மேலும் அப்படி சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று இருந்தால் மேலே சொன்ன உத்தரவில் along with consent letter (form II) என்று இருந்திருக்கும். ஆனால் ஒப்புதல் கடிதம் கொடுக்க வேண்டுமென்று மட்டுமே உள்ளதே தவிர அதை கொடுத்தால் தான் remittanceஐ ஏற்கமுடியும் என்று சொல்லவில்லை. 26.5.2008 அன்று மேல்முறையீட்டாளர் வழங்கிய DD மேற்பார்வை பொறியாளர்தான் உரிய தேதிக்கான ரசீதினை பெற்று தந்திருக்க வேண்டும். அப்படி பெற்று தராதது மேற்பார்வை பொறியாளரின் தவறு மேல்முறையீட்டாளரின் தவறு இதில் இல்லை.

அதோடு Form II வழங்காதது செயற்பொறியாளர் பெரியகுளம் மற்றும் இளநிலைப் பொறியாளர் கீழவடகரை ஆகியோரின் பொறுப்பின்மையே தவிர அதற்காக மேல்முறையீட்டாளர் மீது பழி சுமத்துவது நியாயமில்லை. மேற்படி அதிகாரிகளின் தவறினை கண்டிக்க தவறிய குறைதீர்மன்ற நடவடிக்கையில் எந்த நியாயமும் வழங்கவில்லை எனவே மின்குறைதீர்ப்பாளர் தான் மேல்முறையீட்டாளரின் remittance செய்துள்ள **26.5.2008** அன்றைய தேதியை தகுதி நாளாக ஏற்க வேண்டும். அப்படி ஏற்கும் போது கீழவடகரையில் பொறுப்பு தொகையாக திருமதி. ஆண்டாள் ராணி அவர்களின் remittance தேதி **5.5.2008** ஆகும். அதன் பின் பொறுப்புத் தொகை செலுத்திய தேதி **26.5.2008** ஆகும். இந்த இடைப்பட்ட நாட்களில் வேறு யாரும் பதிவுத் தொகை செலுத்தவில்லை என்ற விபரத்தினையும் அதனால் மேல்முறையீட்டளாரின் மதிப்பீட்டினை கூட்டாக மீண்டும் revised estimate தயாரித்து அவருக்கு ஏற்பட்ட இழப்பீட்டினை திரும்ப வழங்கிட வேண்டும்.

(iii) மேல்முறையீட்டாளருடைய மதிப்பீடு ஏன் தயாரிக்கவில்லை என்ற கேள்விக்கு மேற்பார்வை பொறியாளர் க.எண்./மே.பொ/தேனி மி.ப.வ/தேனி / உ.செ.பொ/உ.பொ/ கோ.த.மி.கு.தீ.ம/அ.எண்.**513** , **16.2.2012** பக்கம் **5**இல் **12.6.2008** அன்று பெரியகுளம் கோட்ட பொறுப்பு வகித்த தேனி கோட்ட செயற்பொறியாளர் அவர்கள் SE/RE & I(D)/AEE/F/Doc/D.No.1297/08 dated **28.8.2008**இன்படி **2008–09** ஆண்டிற்கான குறியீடாக நிர்ணயித்ததில் பெரியகுளம் கோட்டத்திற்கு என்று **16** நபர்கள் என குறியீடுநிர்ணயம் செய்துள்ளதாகவும் அதன்பின் பதிவுத்தொகை செலுத்தியவர்களுக்கு மதிப்பீடு தயார் செய்ய வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இதில் ஆச்சரியப்பட வேண்டிய விசயம் என்னவென்றால் SE/RE (memo) குறிப்பாணை என்பது ஆகஸ்ட் மாதம் **2008**

கடிதமாகும். இக்கடிதத்தின் நடவடிக்கையை ஜுன் மாதம் 12 தேதியே எப்படி தெரிந்து கொண்டார் என்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக உள்ளது.

(iv) பெரியகுளம் கோட்ட பொறுப்பு வகித்த தேனி கோட்ட செயற்பொறியாளர் அவர்கள் 12.6.2008 அன்று பொறுப்புத்தொகை ரூ.500 செலுத்தியவர்களுக்கு இன்றைய தேதியில் பெரியகுளம் கோட்டத்தினுடைய குறியீடு 16 எண்ணிக்கை முடிவடைந்து விட்டதால் இனியாருக்கும் மதிப்பீடு தயார் செய்ய வேண்டாம் என்று தொலைபேசிமூலம் இளநிலை பொறியாளர் உதவி பொறியாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறியுள்ளார்கள். இப்படி தகவல் தெரிவித்த செயற்பொறியாளரே 12.6.2008 அன்றே திருவாளர்கள், 1) அஜ்மல்கான் 2) மோகன்தாஸ், 3) மணிகண்டன் 4) வையாபுரி ஆகிய நால்வரின் கூட்டு மதிப்பீட்டின் முதல் பக்கத்தில் (abstract) கையெழுத்திட்டுள்ளார். உள்பக்கத்தில் 16.6.2008 அன்று திரு. சுகுமாரன் அவர்கள் பொறுப்பேற்ற பின் கையொப்பமிட்டுள்ளார். 12.6.2008 அன்று estimate தயாரிக்க வேண்டாம் என்று சொல்லிய பெரியகுளம் பொறுப்பு தேனி கோட்ட பொறியாளர் அவர்கள் sanction செய்துள்ளார். இது விந்தையிலும் விந்தையாகும்.

**10. <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :</u>**

1) மேல்முறையீட்டாளரின் மனு எதிர் மனுதாரரின் பதிலுரை மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் வாதங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தபோது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ரூ.25,000/– சுயநிதிதிட்டத்தில் சேருவதற்கான விருப்பத்தை பதிவு செய்ய பதிவு கட்டணம் செலுத்தும்பொழுது ஒப்புதல் கடிதம் கொடுக்கப்படவேண்டுமா ?

(ii) மேல்முறையீட்டாளர் பதிவு கட்டணம் ரூ.500/–க்கான வங்கி வரைவோலை (DD)ஐ மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட தேதியை பதிவு கட்டணம்

செலுத்திய தேதியாக கருதி மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் முன்னுரிமையை (Priority) நிர்ணயிக்கலாமா ?

(iii) சுயநிதி திட்டங்களின் கீழ் விவசாய மின்இணைப்பு பெறுவதற்கு கூட்டு மதிப்பீடு செய்வதற்கான வழிமுறைகள் என்ன ?

(iv) மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பத்திற்கான மதிப்பீடு அவர் கூறுவது போல் திருமதி ஆண்டாள் ராணி அவர்களின் விவசாய மின்இணைப்பிற்கான மதிப்பீட்டுடன் கூட்டாக மதிப்பீடு செய்யப்படவேண்டுமா ?

(v) சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு அவர்கள் அந்த ஆண்டு குறியீட்டிற்குள் இல்லையெனில் அவர்களின் பதிவு கட்டணம் பெறப்பட்ட வருடத்திலே மதிப்பீடு செய்யப்படவேண்டுமா ? அல்லது அவர்களுக்கு மின்இணைப்பு வழங்க இருக்கும் ஆண்டு மதிப்பீடு செய்யப்படவேண்டுமா ? மேல்முறையீட்டாளரின் மதிப்பீடு தயார் செய்வதில் ஏதேனும் சுணக்கம் உள்ளதா ? அச்சுணக்கம் வேண்டுமென்றே செய்யப்பட்டதா ?

(vi) வேறு விண்ணப்பதாரரின் கூட்டு மதிப்பீட்டில் உள்ள முறைகேடுகளைப்பற்றி மின்குறை தீர்ப்பாளர் , இந்த மேல்முறையீட்டில் தீர்வு எதுவும் செய்யலாமா ?

**11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**11.1** ரூ.25,000/– சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின்இணைப்பு வேண்டி விண்ணப்பித்தவர்கள் பதிவு கட்டணம் செலுத்தும் பொழுது அந்த திட்டத்தில் சேருவதற்கான சம்மத கடிதம் கொடுக்கப்படவேண்டுமா என்பதை அறிய குறிப்பாணை எண். SE/RE/& I(D) /D/ SES/6077/92 St. C.No.697 (Tech Branch ) Dt. 14.2.1992இல் உள்ள உத்தரவுகளை ஆராய வேண்டும்.

**11.2** மேற்கண்ட உத்தரவின் பத்தி 4இல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

*"The agricultural applicants who are willing to avail the service connection through this scheme shall give a consent letter as per Form II enclosed to the memo and also remit Rs.500 (Rupess five hundred only ) either by cash Or by Demand Draft drawn in favour of Superintending Engineer /Tamil Nadu Electricity Board on a local bank of the area before the expiry of 30days notice. Receipt for the above sum will be issued at the section office. Then the section office will prepare the estimate in the order of priority of remittance of the deposit at the section office and obtain sanction of the competent authority. After sanction of estimate, the executive Engineer/O&M Shall issue 60 days notice of intimation to remit the cost of estimate (Rs.25.000/- or the actual cost whoever is higher less Rs.500-/ either by cash or by demand draft drawn in favour of Superintending Engineer/Tamil Nadu Electricty board and in the local bank of the area for which when paid at the section office a separate receipt will be issued to the applicants by the Inspector of Assessment. In the case of the applicants who give consent and pay Rs.500/- but do not remit the estiamteed cost within 60 days the sum of Rs.500-/ will be forfeited . The date of remittance of the estimate cost less Rs.500/- will be the date of priority for effected supply. A separate priority register shall be maintained for this scheme both in section office and division office "*

**11.3** மேற்கண்ட ஆணையின்படி ரூ.25,000/–க்கான சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய மின்இணைப்பு பெறுவதற்கு பதிவு செய்வதற்கு இரண்டு நிபந்தனைகள் உள்ளன.

(1) ரூ.500/– பதிவு கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) படிவம் 2இன்படி சம்மதக்கடிதம் தரப்படவேண்டும்.

**11.4** எனவே ரூ.25,000/–க்கான சுயநிதி திட்டத்தின் விவசாய மின்இணைப்பு பெற விருப்பத்தை பதிவு செய்தவற்கு பதிவு கட்டணம் ரூ.500/– மற்றும் ஒப்புதல் கடிதமும் தரவேண்டும் என்பதுதான் வாரிய விதியாக உள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>வழக்கெழுவினா இரண்டிற்கான தீர்வு</u>

12.1 ரூ.25,000/– சுயநிதி திட்டத்தின் கீழ் விவசாய இணைப்பு பெறுவதற்காக பதிவு செய்வதற்கான பதிவு கட்டணம் எப்படி செலுத்தப்படவேண்டும் , எதன் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது என்பதை தீர்வு செய்ய, உரிமம்தாரரின் குறிப்பாணை எண். SE/RE/& I(D) /D/SES/6077/92 St. C.No.697 (Tech Branch ) Dt. 14.2.1992ஐ உள்ள உத்திரவினையே மேல்முறையீட்டாளரும், எதிர் மனுதாரரும் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே அந்த உத்தரவைத்தான் ஆராயவேண்டும். மேற்கண்ட குறிப்பாணையின் பத்தி (iii) மற்றும் (iv) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"(iii) For the purpose of eliciting the willingness of the applicants for the above scheme the Executive Engineer/O&M shall issue a 30 days notice of intimation to all the registered applicants as per Form I enclosed to this memo. through acknowledged post. Besides this, arrangements shall also be made to publish the intimation in the notice boards of office of Superintending Engineer, Executive Engineer/O&M, Assistant Executive Engineer/O&M and Section offices and in the Government offices like Block Development Office, District Development Office, District Agricultural Office and the Collectorate.*

*(iv) The agricultural applicants who are willing to avail the service connection through this scheme shall give a consent letter as per Form II enclosed to the memo and also remit Rs.500 (Rupess five hundred only ) either by cash Or by Demand Draft drawn in favour of Superintending Engineer /Tamil Nadu Electricity Board on a local bank of the area before the expiry of 30days notice. Receipt for the above sum will be issued at the section office. Then the section office will prepare the estimate in the order of priority of remittance of the deposit at the section office and obtain sanction of the competent authority. After sanction of estimate, the*

*executive Engineer/O&M Shall issue 60 days notice of intimation to remit the cost of estimate (Rs.25.000/- or the actual cost whoever is higher less Rs.500-/ either by cash or by demand draft drawn in favour of Superintending Engineer/Tamil Nadu Electricty board and in the local bank of the area for which when paid at the section office a separate receipt will be issued to the applicants by the Inspector of Assessment. In the case of the applicants who give consent and pay Rs.500/- but do not remit the estiamteed cost within 60 days the sum of Rs.500-/ will be forfeited . The date of remittance of the estimate cost less Rs.500/- will be the date of priority for effected supply. A separate priority register shall be maintained for this scheme both in section office and division office.*

12.2 பத்தி 3இல் விண்ணப்பதாரர்களின் விருப்பத்தை தெரிந்து கொள்வதற்காக செயற்பொறியாளர்கள் விவசாய மின்இணைப்பு கேட்டு பதிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்களுடைய விருப்பத்தை 30 நாட்களுக்குள் தெரிவிக்கும்படி கடிதம் ஒன்றை படிவம் 1படி அனுப்ப வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த தகவலை மேற்பார்வை பொறியாளர், செயற்பொறியாளர் உதவி செயற்பொறியாளர் பிரிவு அலுவலகம் ஆகிய அலுவலகங்களிலும் மற்றும் BDO, DDO, DAO மற்றும் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலுள்ள தகவல் பலகையிலும் தெரிவிக்கும்படி கேட்டு கொள்ளப்பட்டுள்ளது.

12.3 பத்தி4இல், இந்த சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற விரும்பும் விவசாய மின்இணைப்பு விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விருப்பத்தை படிவம் இரண்டின்படியும் மேலும் பதிவு கட்டணமாக ரூ.500/– ரொக்கமாகவோ அல்லது மேற்பார்வை பொறியாளரின் பெயரில் அந்த பகுதியில் உள்ள வங்கியில் (local bank of the area) வங்கி வரைவோலை (DD) ஆகவோ கடிதம் கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அதற்கான ரசீது பிரிவு அலுவலகத்தில்

வழங்கப்படும் மேலும், பணம் கட்டியவர்களின் மதிப்பீடு அந்த பிரிவு அலுவலகத்தில் பணம் செலுத்தப்பட்ட வரிசையில் தயாரிக்கப்படும் என்றும் உள்ளது.

12.4 மேற்கண்ட குறிப்பாணையில் பத்தி 4ஐ குறிப்பிட்டுதான் மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் வாதிட்டனர். மேல்முறையீட்டாளர் அந்த ஆணையின்படி மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் 500/– வங்கி வரைவோலை (DD) பெறப்பட்ட நாளினைத்தான் பதிவு செய்வதற்கான நாளாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அந்த பணம், பிரிவு அலுவலகத்திற்கு வந்து அங்கு போடப்படும் ரசீதின் நாளினை பணம் செலுத்திய நாளாக எடுத்து அதன்படி முன்னுரிமையை (Priority) நிர்ணயிப்பது தவறு என்று வாதிட்டார். மேலும் மேற்பார்வை பொறியாளரின் அலுவலகத்தில் பணம் கட்டிய தேதியின்படி ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திலும் அங்குள்ள விண்ணப்பத்தின் முன்னுரிமை நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும், முன்னுரிமையை நிர்ணயிப்பது மேற்கண்ட குறிப்பாணையில் எதிர்மனுதாரர் கூறுவது போல் தவறு என்றும் வாதிட்டார்.

எதிர்மனுதாரர், அந்த குறிப்பாணையின்படி, பிரிவு அலுவலகத்தில் என்று பணம் பெறப்பட்டு, ரசீது போடப்படுகிறதோ அந்த நாள்தான் முன்னரிமைக்கான நாள் என்றும் வாதிட்டார். இருவருமே மேற்படி 12.2.1992 குறிப்பாணையின் பத்தி 4ஐ சுட்டிக்காட்டியே தங்களுடைய வாதங்களை கூறியுள்ளனர்.

12.5 மேற்கண்ட குறிப்பாணையின் பத்தி 3இல் விண்ணப்பதாரர்களின் விருப்பத்தை அறிவதற்காக அவர்களுக்கு அனுப்பப்படும் கடிதத்தின் படிவம் I என்று கூறப்பட்டுள்ளது. அந்த படிவம் Iன் பத்தி 3இல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

*"இத்திட்டத்தின்கீழ் தாங்கள் மின்இணைப்பு பெற விரும்பினால் இக்கடிதம் கிடைத்த 30 நாட்களுக்குள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒப்புதல் கடித படிவத்தில் கையொப்பமிட்டு (*consent letter*) ரூ.500/– ரூபாய் ஐநூறு மட்டும் ) இளநிலை / உதவி பொறியாளர்*

*அலுவலகத்தில் செலுத்தி ஒப்புதல் கடிதத்தையும் அளித்து பதிவு செய்து கொள்ள வேண்டும்."*

*(ஆனால் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்ட கடிதம் படிவம் I இன்படி இல்லை).*

12.6 மேற்கண்ட பத்தியின்படி பணம் செலுத்தப்படவேண்டியது, பிரிவு அலுவலகம் என்றும் தெரிகிறது. மேலும், ரூ.500/– இளநிலை / உதவி பொறியாளர் அலுவலகத்தில் செலுத்தி, ஒப்புதல் கடிதத்தையும் அளித்து பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று இருப்பதால் பதிவு கட்டணத்துடன், ஒப்புதல் கடிதமும் கொடுக்கப்படவேண்டும் என்று தெரிகிறது.

12.7 மேலும், மேற்கண்ட குறிப்பாணையின் பத்தி நான்கில் இந்த திட்டத்தில் மின் இணைப்பு பெற விரும்பும் விவசாய மின்இணைப்புக்கான விண்ணப்பதாரர்கள் அக்குறிப்பாணையுடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் இரண்டின்படி உள்ள தங்களுடைய ஒப்புதல் கடிதம், மற்றும் பதிவு கட்டணமாகிய ரூ.500/– ரொக்கமாகவோ அல்லது மேற்பார்வை பொறியாளர் பெயரில் உள்ளூர் வங்கியில் பெறப்பட்ட வங்கி வரைவோலை (DD) கடிதம் கிடைக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உள்ளது.

12.8 ஆனால் ஒப்புதல் கடிதத்தின் படிவம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. ஒப்புதல் கடிதத்தின் படிவத்தை செயற்பொறியாளர் அவர்கள் சுயநிதி திட்டத்தில் விருப்பம் தெரிவிக்க கோரும் அறிவிப்பு கடிதத்துடன் இணைக்காதது எதிர்மனுதாரரின் தவறு. ஆனால் மனுதாரருக்கு அனுப்பிய அறிவிப்பு கடிதத்தில் சம்மதக் கடிதம் தரவேண்டும் என்ற வாசகம் உள்ளது. எனவே, சம்மதக் கடிதம் கொடுக்க வேண்டும் என்பது மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

12.9 ஆனால், மேல்முறையீட்டாளர் தன்னுடைய பதிவு கட்டணம் ரூ.500/– க்கான வரைவோலை (DD) மட்டுமே மேற்பார்வை பொறியாளருக்கு 26.5.2008 அன்று அனுப்பியதாக கூறியுள்ளார். ஆனால் அவர் ஒப்புதல் கடிதத்தையும் சேர்த்து கொடுத்தால்தான் அவரின் விண்ணப்பம் சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்கான முறையான விண்ணப்பமாக வாரிய விதிப்படி

இருக்கமுடியும். ஒப்புதல் கடிதம் இல்லையென்றால் அவரின் விண்ணப்பம் முறையான விண்ணப்பம் ஆகாது . மேலும், அவர் 29.5.2008 அன்றுதான் ஒப்புதல் கடிதத்தை கொடுத்ததாக கூறியுள்ளார். எனவே அவரின் விண்ணப்பம் 29.5.2009 அன்றுதான் முழுமையானதாக உள்ளது. எனவே அவரின் விண்ணப்பத்தின் முன்னுரிமை 26.5.2008 அன்று அவர் மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பிய ரூ.500/– வங்கி வரைவோலையின் தேதியின்படி அவரின் முன்னுரிமையை நிர்ணயிக்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13. வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு**

13.1 சுயநிதி திட்டங்களின் கீழ் விவசாய மின்இணைப்பு பெறுவதற்கான கூட்டு மதிப்பீடு செய்வது பற்றி குறிப்பாணை எண். SE/RE/& I(D) /D/ SES/6077/92–3 (Tech Branch ) Dt. 27.4.1992இல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

x x x x x x x

(i) *In the case of extension estimates involving more than one applicant coming ina feeder the cost of extension estimate should be divided equally among applicants subject to the minimum of Rs.25.000/- each.*

x x x x x x x

13.2 மேலும், குறிப்பாணை எண்.SE/RE/&I(D)/RE II/F.agl/D.No.246/2000(Tech Branch ) dt. 10.3.2000. இல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

*"incase of extension estimates involving more than one applicant coming in a feeder/distribution transformer the total cost of the estimate should be divided equally among the applicants subject to a minimum of Rs.25,000 per service (for the applicant coming under Rs.25,000/- category of RSFS), if the cost of extension per service is less than Rs.50,000/- and if the cost of extension per service exceeds Rs.50,000 then actual cost of extension should be equally shared by the applicants covered in the estimate."*

13.3 மேற்கண்ட இரண்டு குறிப்பாணைகளையும் கூர்ந்து படிக்கும்போது கூட்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த விண்ணப்பதாரர்கள் அனைவரும், ஒரே மின்மாற்றியில் அல்லது ஒரே (feeder) தடத்தில் வரவேண்டும் என்று அறிய முடிகிறது.

14. <u>வழக்கெழு வினா நான்கிற்கான தீர்வு</u>

14.1 இந்த மேல்முறையீட்டாளர், தன்னுடைய விவசாய மின்இணைப்பும் திருமதி. ஆண்டாள் ராணி அவர்களுக்கான விவசாய மின்இணைப்பும் ஒரே மின்மாற்றி மற்றும் தாழ்வழுத்த மின்னூட்டியும் ஆகும். எனவே, இரண்டு பேருக்கும் சேர்த்து கூட்டு மதிப்பீடு தயார் செய்யாதது அவருக்கு இழப்பு என்று கூறியுள்ளார்.

14.2 எதிர் மனுதாரர் திருமதி. பா. ஆண்டாள் ராணி அவர்கள் 5.5.2008 அன்று பணம் செலுத்தி முதலாவதாகவும் திரு. ராமசாமி அவர்கள் 29.5.2008 அன்று பணம் செலுத்தி 12வது நபராகவும் உள்ளனர் எனவே இருவரும் சோத்துப்பாறை மின்மாற்றி XIIஇல் இருந்துதான் மின்இணைப்பு தரவேண்டும் என்றும் மேலும் இரண்டு பேருக்கும் கூட்டு மதிப்பீடு செய்யப்படவேண்டும் எனில் பிரிவு அலுவலர் 12 பேர்களுக்கும் கள ஆய்வு செய்து ஒரே நாளில் மதிப்பீடு செய்தால்தான் 12வது நபரை ஒன்றாவது நபருடன் சேர்க்கமுடியும் என்றும் அவ்வாறு 12 பேருக்கும் ஒரே நாளில் கள ஆய்வு செய்து மதிப்பீடு செய்வது தொழில் நுட்ப முறையில் சாத்தியமற்றது என்றும் வாதிட்டார். மேலும் 2 முதல் 11 வரை மதிப்பீடு செய்யாமல் 1வது நபரையும் 12வது நபரை இணைத்து கூட்டு மதிப்பீடு செய்வது விதிமுறைக்கு மீறலாகும் என்றும் அதனால்தான் இரண்டு விண்ணப்பங்களையும் சேர்த்து கூட்டு மதிப்பீடு தயாரிக்க முடியவில்லை என்று வாதிட்டார்.

14.3 செயற்பொறியாளர் கொடுத்த ரூ.25,000/– சுயநிதி திட்டத்தில் பணம் செலுத்தியவர்களின் பட்டியலை ஆராய்ந்து பார்க்கும்பொழுது திருமதி. ஆண்டாள் ராணி அவர்கள் ரு.500/– செலுத்திய தேதி 5.5.2008 என்றும் தெரியவருகிறது. திரு. மு . ராமசாமி அவர்கள் ரூ.500/–க்கான வங்கி

வரைவு எடுத்த நாள் 26.5.2008 பணம் பிரிவு அலுவலகத்தில் ரசீது போட்ட நாள் 29.5.2008 என்றும் சுயநிதி திட்டத்தில் சேருவதற்கு ஒப்புதல் கடிதம் கொடுத்த நாள் 29.5.2008 என்றும் தெரியவருகிறது. மேலும் திருமதி. ஆண்டாள் ராணி அவர்களின் விவசாய மின் இணைப்பிற்கான மதிப்பீட்டின் அனுமதி 23.5.2008 அன்று வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

**14.4** மேற்கண்ட விவரங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது திரு. மு. ராமசாமி அவர்கள் சுயநிதி திட்டத்தில் பதிவு செய்வதற்கான ரூ.500/— க்கான DDஐ எடுத்த நாளாக 26.5.2008ஐக்கு மூன்று நாட்களுக்கு முன்பே (ie) 23.5.2008, திருமதி. ப. ஆண்டாள் ராணி அவர்கள் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு விட்டது. என்று தெரிகிறது. எனவே, திரு. மு ராமசாமி அவர்களின் விண்ணபப்த்தையும் மற்றும் திருமதி. ஆண்டாள் ராணி அவர்களின் விண்ணபப்த்தையும் ஒன்றாக சேர்த்து கூட்டு மதிப்பீடு செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**15. <u>வழக்கெழு வினா ஐந்திற்கான தீர்வு</u>**

**15.1** ரூ.25,000/—க்கான சுயநிதி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு எப்பொழுது மதிப்பீடு செய்ய படவேண்டும். வாரியத்தின் குறிப்பாணைகளில் மதிப்பீடு, பிரிவு அலுவலகத்தில் பணம் கட்டப்பட்ட வரிசையில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த மதிப்பீடு தொகையானது 50,000/— மேல் இருந்தால் மதிப்பீடு தொகையையும், ரூ.50000/— குள் இருந்தால் 25,000/—ஐயும் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அப்படி பணத்தை செலுத்தும் பொழுது முதலில் கட்டிய ரூ.500/— கழித்து மீதி பணத்தை மட்டும் வாரியத்திற்கு செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் அரசு ஆணைக்கு ஏற்ப வருடாந்திர குறியீடு நிர்ணயிக்கப்படுகிறது. எனவே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அந்த வருட குறியீடு முடிந்துவிட்டால் அடுத்த வருட குறியீட்டில்தான் மின்இணைப்பு வழங்க முடியும். எனவே குறியீட்டிற்கு தகுந்தவாறுதான் மதிப்பீடு தயார் செய்யப்படவேண்டும். ஆனால் மதிப்பீடு தயாரித்த

பின்பு 30 நாட்களுக்குள் பணம் கட்டாவிடில் அந்த விண்ணப்பத்திற்கு சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க இயலாது. மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்பு விண்ணப்பதாரர் பணம் கட்டாமல் இருந்துவிட்டால், அந்த வருட குறியீட்டை எட்டுவது சிரமமாகவும் எனவே, குறியீட்டிற்கு சரியான எண்ணிக்கையில் சமமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டால், குறியீட்டை எட்டுவது முடியாமல் போக வாய்ப்பு உண்டு. குறியீட்டிற்கு மேல் மதிப்பீடு தயார் செய்தாலும், குறியீட்டை தாண்டாமல் இருக்க வேண்டும் என்றால் மதிப்பீடு செய்து விண்ணப்பதாரர் பணம் செலுத்திய பின்பும், மின் இணைப்பு வழங்க முடியாது. எனவே, குறியீட்டிற்கு மேல் மதிப்பீடு செய்யப்பட்டு பணம் செலுத்தியவர்களுக்கு அடுத்த வருட குறியீட்டில்தான் மின் இணைப்பு வழங்கப்படும் என்று விண்ணப்பதாரரிடம் ஒப்புதல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

15.2 இந்த மேல்முறையீட்டாளர் தன்னுடைய விண்ணப்பத்திற்கும் தான் பதிவு பணம் ரூ.500/– கட்டிய வருடத்திலே தயாரித்து இருந்தால் தனக்கு அந்த வருட (cost data) விலைப்பட்டியலின்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கும். அது அடுத்த வருடத்தைவிட குறைவாக இருக்கும். எனவே தனக்கு மதிப்பீடு அந்த வருடத்திலே தயாரிக்காததால் நஷ்டம் என்று வாதிட்டார்.

15.3 விலைப்பட்டியலில் (cost data) வருடம் தோரும் மாறுவது என்பது உண்மை. எனவே, அடுத்த வருடம் மதிப்பீடு செய்யும் பொழுது, மதிப்பீட்டின் தொகை உயர்விற்கு வாய்ப்புகள் அதிகம். ஆனால் எந்த வருடத்தில் மதிப்பீடு செய்யப்படுகிறதோ, அந்த வருடத்திலே பணமும் செலுத்தப்படவேண்டும். எனவே, முந்திய வருடமே விலைப்பட்டியலை பின்பற்றி மதிப்பீடு செய்யப்படும் விண்ணப்பதாரர், பணம் செலுத்திய பின்பு அடுத்த வருட குறியீடு வரும் வரை காத்திருக்க வேண்டும். எனவே, அவர் கட்டிய பணம் வாரியத்திற்கு முன்பணமாக வந்து சேருகிறது. பணம் நுகர்வோரிடமிருந்தால் அதற்கு வங்கியில் வட்டி கிடைத்திருக்கும். அந்த வட்டியினை விண்ணப்பதாரர் இழக்கிறார். ஆனால், குறியீடு வரும் வருடத்தில் மதிப்பீடு தயார் செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு வட்டி இழப்பீடு கிடையாது. ஆனால் மதிப்பீட்டில்

விலைப்பட்டியலின் விலை உயர்ந்திருக்க வாய்ப்பு உள்ளது. எனவே, இதில் மதிப்பீடு செய்த வருடம் பணம் கட்டிய பின்பு மின் இணைப்பு பெறும்பொழுது பணத்திற்கான வட்டி இழப்பு ஏற்படுகிறது. ஆனால் குறியீடு வரும் வருடம் மதிப்பீடு செய்தால் மதிப்பீட்டின் மொத்ததொகை அதிகரிக்கிறது. இரண்டிலும் நிறை குறை இருப்பதால் விண்ணப்பதாரருக்கு மதிப்பீடு செய்யும் ஆண்டு மாறுவதால் பெரிய மாறுதல் ஒன்றும் இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும் எந்த வருடத்தில் மின் இணைப்பு வழங்கப்படுகிறதோ அந்த வருடத்தில் மதிப்பீட்டை தயாரிப்பதுதான் நடைமுறை ஆகும்.

15.4 இந்த மேல்முறையீட்டாளரின் வேண்டுகோள் தன்னுடைய மதிப்பீட்டை அடுத்த வருடத்தில் தான் தயார் செய்தனர் . ஆனால் அஜ்மல்கான் கே.எம். மோகன்தாஸ், கே. மணிகண்டன், மற்றும் வையாபுரியின் விண்ணபத்திற்கு மதிப்பீடு அந்த வருடத்தில் செய்யப்பட்டுவிட்டது. அது அவர்களுக்காக வேண்டும் என்றே செய்யப்பட்டது என்று கூறியுள்ளார். கீழ்வடகரை பிரிவு அலுவலகத்தில் 5/2008 மாதத்தில் பதிவு கட்டணம் செலுத்தியவர்களின் அனுமதிக்கப்பட்ட தேதி, பணம் செலுத்தப்பட்ட தேதி, மின்இணைப்பு வழங்கப்பட்ட தேதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பெபயர் | பதிவுக் கட்டணம் | மதிப்பீடு அனுமதிக்கப்பட்ட நாள் | பணம் செலுத்திய நாள் | மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | பி. ஆண்டாள்ராணி | 5.5.2008 | 23.5.2008 | 23.6.2008 | 29.1.2010 |
| 2 | பழனிசாமி | 13.5.2008 | 24.5.2008 | 3.6.2008 | 5.3.2009 |
| 3 | பி. முருகன் | 26.5.2008 | 7.6.2008 | 2.7.2008 | 16.2.2010 |
| 4 | அஜ்மல்கான் | 26.5.2008 | 12.6.2008 | 30.6.2008 | 29.1.2010 |
| 5 | கே. மோகன்தாஸ் | 26.5.2008 | | 30.6.2008 | 29.1.2010 |
| 6 | கே. மணிகண்டன் | 26.5.2008 | | | |
| 7 | வையாபுரி | 28.5.2008 | 12.6.2008 | 30.6.2008 | 16.2.2010 |
| 8 | ரேணுகாதேவி | 28.5.2008 | Cancelld as per party request | | |
| 9 | பி. கருத்தப்பாண்டி | 28.5.2008 | 3.7.2010 | 12.7.2010 | 20.5.2011 |
| 10 | சுந்திரஹாசன் | 28.5.2008 | 3.7.2010 | 12.7.2010 | 20.5.2011 |
| 11 | இப்ராஹிம் | 29.5.2008 | 9.7.2010 | 16.8.2010 | 20.5.2011 |
| 12 | ஜி. ரவி | 29.5.2008 | 16.8.2010 | Cancelled | – |
| 13 | எம். ராமசாமி | 29.5.2008 | 16.8.2010 | 24.8.2010 | 13.10.2011 |
| 14 | ஏஸ். கோவிந்தராஜ் | 29.5.2008 | 16.8.2010 | 18.8.2010 | 20.5.2011 |
| 15 | பி.எஸ்.முத்துவேல் | 29.5.2008 | 16.8.2010 | 18.8.2010 | 20.5.2011 |
| 16 | எஸ். மகேஸ்வரி | 29.5.2008 | 16.8.2010 | 18.8.2010 | 20.5.2011 |
| 17 | எஸ். மகேஸ்வரி | 29.5.2008 | 16.8.2010 | 18.8.2010 | 20.5.2011 |
| 18 | எம். கமல்முஷ்தபா | 29.5.2008 | 28.8.2010 | 8.9.2010 | 13.10.2011 |

15.5 மேற்கண்ட அட்டவணையை பார்க்கும்பொழுது 26.5.2008 வரை பதிவு கட்டணம் செலுத்திய அனைவருக்கும் மதிப்பீட்டிற்கான அனுமதி 12.6.2008 இல் பெறப்பட்டுள்ளது. திரு. வையாபுரி என்பவருக்கு 28.5.2008இல் பதிவு கட்டணம் செலுத்தியிருந்தாலும், 26.5.2008இல் பதிவு கட்டணம் செலுத்திய திரு. அஜ்மல்கான், மோகன்தாஸ், மணிகண்டன் ஆகியவர்களுடன் கூட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதால் அவருக்கும் 12.6.2008இல் மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அவர்களுக்கும் அந்த வருடம் மின் இணைப்பு வழங்கப்படவில்லை, அடுத்த வருட குறியீட்டில் தான் வழங்கப்பட்டுள்ளது). மற்ற அனைவருக்கும் அதாவது 28.6.2008ற்கு மேல் பதிவு கட்டணம் செலுத்திய அனைவருக்கும் 7/2010 இல் மற்றும் 8/2010இல் மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதாவது இரண்டு வருடங்கள் கழிந்த பின்புதான் மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டு 2011–12 ஆண்டிற்கான குறியீட்டில் தான் மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. மேலும் திரு ராமசாமி அவர்களுக்கு முன்னால் பணம் கட்டிய நான்கு பேர்களுக்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. திரு. ராமசாமி அவர்களுக்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட 2010–11வது ஆண்டில்தான்.

15.6 எனவே, இதில் வரிசை எண்ணில் மாற்றம் எதுவும் இல்லை. எனவே மதிப்பீடு திரு. ராமசாமிக்காக வேண்டுமென்றே தாமதப்படுத்தப்பட்டது என்று கருதமுடியவில்லை.

15.7 ஆனால், 12.6.2008க்கு மேல் எந்த மதிப்பீடும் தயாரிக்கப்படவேண்டாம் என்றோ அல்லது அனுமதி அளிக்கப்படவேண்டாம் என்று செயற்பொறியாளரால் கூறப்பட்டது என்று எதிர்மனுதாரர் கூறியுள்ளார். ஆனால், அவர் சுட்டிக்காட்டும் 2008–2009க்கான குறியீடு தேனி மாவட்டத்திற்கு 27 என்று 25.8.2008இல் வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் பெரியகுளத்திற்கு ஆன குறியீடு 16 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் பெரியகுளம் கோட்டத்தின் குறியீடு ஏற்கெனவே

எட்டப்பட்டு விட்டதால் தான் 12.6.2008இல் இனி எந்த விவசாய மின் இணைப்பிற்கும் மதிப்பீடு செய்ய வேண்டாம் என்று செயற்பொறியாளரால் அறிவிக்கப்பட்டது என்று கூறுவது ஏற்படையதாக இல்லை. ஏனெனில் 25.8.2008இல் உள்ள தகவலைக் கொண்டு அதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே ஒரு உத்தரவு போடப்பட்டுள்ளது என்பது சரியில்லை. மேலும், 12.6.2008ற்கு பிறகு 19.6.2008 மற்றும் 3.7.2008 அன்றும் மதிப்பீடுகள் பெரியகுளம் கோட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மதிப்பீடு அந்த வருடத்தில் தயாரிக்கப்படாததற்கு காரணம் செயற்பொறியாளரின் உத்தரவு என்பதுவும் ஏற்புடையதல்ல.

15.8 மேல்முறையீட்டாளருக்கு அந்த வருட குறியீட்டில் மின்இணைப்பு வழங்கும் நிலை இல்லை என்பதால், மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு விண்ணபத்திற்கு பதிவுக் கட்டணம் செலுத்திய வருடமே மதிப்பீடு தயார் செய்ய வேண்டியது இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளரின் வரிசை எண்ணிற்கு நான்கு எண்களுக்கு முன்பே மதிப்பீடு செய்வது நிறுத்தப்பட்டுள்ளதாலும் வரிசை மாறாமல் தான் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாலும், இதில் மேல்முறையீட்டாளருக்கு வேண்டும் என்றே பழிவாங்கும் நோக்குடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது என்று கூறப்படுவதும் சரியல்ல என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

**16. <u>வழக்கெழு ஆறு வினாவிற்கான தீர்வு</u> :**

16.1 மேல்முறையீட்டாளர் திரு. மு. இராமசாமி அவர்கள் திருவாளர்கள் அஜ்மல்கான், திரு. மோகன்தாஸ், மணிகண்டன் மற்றும் ரா. வையாபுரி ஆகியவர்களுக்கான தயாரிக்கப்பட்ட கூட்டு மதிப்பீட்டில் முறைகேடு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

16.2 இது விஷயமாக தேனி மாவட்டத்தின் மின்நகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்புரை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ மேலும் MEMO NO.EE/D/PKM/TA/F4/DNO.69/2008–2009 நாள் 96 2008இன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ள கூட்டு மதிப்பீடானது முறைகேடாக உள்ளது என்று தெரிவித்து*

*உள்ளீர்கள். அது தங்களது நிலத்திற்கு விவசாய மின்இணைப்பு வழங்கப்படுவதற்கு அப்பாற்பட்ட விஷயமாக கருதப்படுகிறது.*

*இருப்பினும் மேற்பார்வை பொறியாளர் /தேனி பகிர்மான வட்டம் /தேனி நீதியின்பால் மேற்படி பொருள் சம்பந்தமாக உரிய அலுவலர்கள் விசாரணை செய்து உண்மை இருப்பின் தமிழ்நாட மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிமுறைகளின்படி தக்க நடவடிக்கை எடுத்து ஆவண செய்யப்படும் என்ற விபரம் தங்களுக்கு அன்புடன் தெரிவித்து கொள்ளப்படுகிறது. "*

**16.3** மேலும், எதிர்மனுதாரர் மேற்படி மதிப்பீட்டை ஆய்வு செய்வதற்கு ஒரு செயற்பொறியாளர் ஒரு உதவி செயற்பொறியாளர் இரு இளநிலைப்பொறியாளர் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது என்றும், அவர்களின் அறிக்கையின்படி முறைகேடு எதுவும் தெரியவந்தால் உரிய பொறியாளர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

**16.4** இந்த விஷயத்தில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் (stand) நிலைபாடுதான் என்னுடைய நிலைபாடாக உள்ளதால், இதில் நான் தீர்வு எதுவும் செய்யவில்லை.

**17. <u>முடிவுரை :</u>**

**17.1** மேற்கண்ட பத்தி 11 முதல் 16 வரை உள்ள தீர்வின்படி தேனி மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்ப்பு சரிதான் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**17.2** மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல் முறையீட்டாளரின் மனு எண்.6/2012 மின்குறைதீர்ப்பாளரால் இறுதி முடிவு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை என்றும் தெரியப்படுத்தப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திரு. எம். இராமசாமி,
த/பெ முத்தையா,
20/114, முத்து ராஜாத்தெரு,
தென்கரை, பெரியகுளம்.

2) மேற்பார்வை பொறியாளர் ,

தேனி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
தேனி – 625 531

3) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

4) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

5) உதவி இயக்குநர் (கணிணி)
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.